# இரண்டாயிரத்திற்கு பின் தமிழில் வெளிப்படும் பெண்ணிய குரல்கள்

எஸ். சந்தியா, கற்பித்தல் உதவியாளர், எஸ்.எஸ்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

## அறிமுகம்:

பெண்ணியம் என்பது பாலின சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பெண்கள் சமமான உரிமைகளையும் சுதந்திரத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செயல்படக்கூடிய இயக்கம் எனலாம்.

பெண்ணியத்தின் நோக்கம் பாலின அடிப்படையில் ஆன பாகுபாடுகளையும் சமத்துவமின்மையையும் மற்றும் பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளையும் எதிர்ப்பதே இதன் நோக்கமாகும்.

மேலும் பெண்கள் ஆண்களுக்கு இணையான உரிமைகள், வாய்ப்புகள் ,மரியாதைக்கு தகுதியானவர்கள் என்பதை உறுதி செய்கின்றது. பெண்ணியத்தின் முதன்மை குறிக்கோள்கள் ஆனவை வாக்குரிமை, கல்வி, பாலியல் சுதந்திரம், சொத்துரிமைக்கு உரிமை கோருதலை வலியுறுத்துகின்றது.

சமூகத்தில் பெண்களுக்கு எதிரான அனாதிக்கம் மற்றும் இந்த சமூக கட்டமைப்புகளினால் அவர்கள் சந்திக்கக்கூடிய வன்முறைகளுக்கு எதிராக குரல் எழுப்புகின்றது. இவற்றை கருத்துகளில் மட்டுமல்லாது மாறாக சமூக இயக்கங்கள், அரசியல் பிரச்சாரங்கள் போன்றவற்றின் வழி பெண்ணியம் தனக்கான ஒரு இடத்தை நிலை நிறுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சமூகத்தில் பெண்ணியம் பல்வேறு பரிணாமங்களில் வளர்ந்து வந்துள்ளது. அந்த வகையில் பெண்ணியத்தின் அரசியல் உரையாடல் இருபதாம் நூற்றாண்டில் தீவிரமடைந்தது. ஆனால் 2000 ஆண்டுக்கு பின் தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக ஊடகம், உலகமயமாக்கல் ஆகியன முக்கிய முகங்களாக அமைந்தன. இதனை விளக்குகின்ற நோக்கில் இம்முன்மொழிவு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இலக்கியத்தில் பெண்ணியத்தின் வளர்ச்சி:

தமிழ் இலக்கியங்கள் காலங்காலமாக பெண்களின் அனுபவங்களை வெளிப்படுத்தும் தலங்களாக இருந்து வந்துள்ளது என்றால் அதில் மாற்றுக் கருத்து இல்லை.

அம்பையின் “மரங்கள் சொல்லும் கதைகள்”, பாமாவின் “சங்கதி”, சல்மாவின் “பெண்கள் கனவுகள்”, தமிழ்செல்வியின் “கீதாரி” போன்ற படைப்புகள் பெண்களின் உடல், மனம், சமூகம் போன்றவற்றிற்கிடையேயான போராட்டங்களை மிக நுணுக்கமாக பதிவு செய்துள்ளன.

ஆனால் 2000 ஆண்டிற்கு பின் எழுத்தாளர்களின் புதிய தலைமுறை உடல் அரசியல், சுய அடையாளம், உடல் உரிமை, பாலின சுதந்திரம் போன்றவற்றை தங்களின் படைப்புகளில் பிரதிபலிக்க தொடங்கின.

உலகத்தின் வளர்ச்சி பெண்ணியத்தை திரைப்படம், கவிதை, வலைப்பதிவு போன்ற தளங்களில் பரவலாக உருவாக்கியுள்ளது.

## 2000 ஆண்டிற்கு பின் பெண்ணியத்தின் மாற்றங்கள்

இரண்டாயிரத்திற்கு பின் எழுதப்பட்ட பெண்ணிய நாவல்கள் பெண்களின் அதிகாரத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்தும் படைப்புகள் சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளை ஆராயும் புனைக்கதைகள் போன்றவை உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிடத்தக்கது டிஜிட்டல் பெண்ணியம்.

இரண்டாயிரத்திற்கு பிந்தைய தமிழ் பெண்ணிய வளர்ச்சி பல தளங்களில் வளர்ந்து வருகின்றது. சமூக ஊடகங்களின் வழியாக பெண்கள் தங்களின் குரல்களை வெளிப்படுத்தும் தளங்கள் உருவாகியுள்ளன.

திரைப்படங்களில் “அருவி”, “பொன்மகள் வந்தாள்”, “ஜெய்பீம்” போன்ற திரைப்படங்கள் சமூக நீதிக்கான போராட்டங்களை வெளிப்படுத்துகின்றன.

இன்றைய நிலையில் சாதி, வர்க்கம், பாலினம், பிராந்தியம், மதம் போன்றவற்றில் பெண்ணிய ஆய்வுகளை மேற்கொள்ள ஏதுவானவைகளாக உள்ளன.

ஊடகங்களை பொருத்தமட்டில் பெண்களின் உடல் மற்றும் அடையாளம் எப்படி பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது என்பது இன்றைய பெண்ணிய ஆய்வின் புதிய துறையாக மாறியுள்ளது.

## இலக்கிய மதிப்புரை:

தமிழ் பெண்ணிய ஆய்வுகளாக மேற்கொள்ளப்பட்ட எழுத்தாளர்களை எடுத்துக் கொண்டால் அவை பெரும்பாலும் 1990கள் வரையிலான எழுத்தாளர்களையே மையமாகக் கொண்டுள்ளன.

அம்பை, சல்மா ஆகியோரின் படைப்புகள் குறித்து பல பெண்ணிய ஆய்வுகள் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இரண்டாயிரத்திற்கு பின் எழுந்த குரல்களாக மாலதி மைத்திரி, சிறுமதி, பிரபா கல்யாணி, லலிதா சுப்ரமணியம், தமிழ்செல்வி, உமாமகேஸ்வரி, தமிழ் நதி (ஈழத்து பெண் எழுத்தாளர்) போன்றோரின் படைப்புகள் குறித்து ஆய்வுகள் மிகக் குறைவு.

மேலும் தமிழ் திரைப்படங்களில் பெண்ணிய கோணத்தை ஆராயும் ஆய்வுகள் பெரும்பாலும் பெண் பாத்திரம் பற்றிய விமர்சனங்களாகவே உள்ளனவே அன்றி பெண்ணிய கோட்பாடுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட விரிவான ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த குறைபாடு இவ்வாய்வின் முக்கிய தொடக்கமாகும்.

## எதிர்பார்க்கப்படும் முடிவுகள்:

தமிழில் பெண்ணிய சிந்தனையின் வளர்ச்சியை வரலாற்று மற்றும் நவீன கோணங்களில் புரிந்து கொள்ள இவ்வாய்வு வழிவகுக்கும். நவீன பெண்களின் குரல், உடல் அரசியல் போன்றவை தமிழில் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை விளக்கலாம். பெண்ணிய ஆய்வுகளில் தமிழ் இலக்கியம் ஒரு தனித்த அடையாளத்துடன் உலகளாவிய பெண்ணிய புலத்துடன் இணைக்கப்படும்.

## முடிவுரை:

இரண்டாயிரத்திற்கு பின் தமிழில் உருவாகியுள்ள பெண்ணிய சிந்தனைகள் மொழி, கலாச்சாரம் போன்றவற்றை ஆராய்கின்றன. இதன் வழி பழைய பெண்ணிய கோட்பாடுகளுக்கு புதிய பரிணாமத்தை உருவாக்குகின்றன. இந்த ஆய்வு தமிழ் பெண்ணிய குரல்களை உலகளாவிய பெண் உரையாடலுடன் இணைக்கும் முயற்சியாக அமையும். இது ஒரு முன்மொழிவு மட்டுமே; முழு ஆய்வில் தலைப்பு விரிவாக மாறலாம்.

## மேற்கோள்கள்:


*Ambai – In a Forest, a Deer: Stories by Ambai*

*Bama – Sangati*

*Kutti Revathi – Mulaigal (2002)*

*Salma – Women, Dreams and Shadows*

*Malathi Maithri – Oru Kuppaiyin Kadhai*

*V. Geetha – Patriarchy (2007)*

*K. Srilata (ed.) – The Rapids of a Great River: The Penguin Book of Tamil Dalit Writing*

*“Feminism in the 21st Century: A Global Perspective” – Economic and Political Weekly*

*ResearchGate & Google Scholar articles on Tamil Feminism after 2000*